

# இடம் பொருள் கலைஞர்

73

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்!**



# பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்!

## கடல் ஆள வைத்த தலைவர்

‘திரைகடல் ஓடி திரவியம் தேடியவர்கள் தமிழர்கள்’ என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. தமிழர்கள் கடல் வாணிபத் துறையில் சாதித்தது பற்றி, சங்க இலக்கியத்திலும் வரலாற்றிலும் நிறைய செய்திகள் உண்டு. பண்டைய தமிழ்நாட்டில் 18 வகையான கப்பல்களை, மக்கள் பயன்படுத்தியதாகத் தகவல்கள் இருக்கின்றன.

ஆனால், கப்பல் சார்ந்த வாணிபம், தொழில் போன்றவை எல்லாம் ஆங்கிலேயர்களின் ஆட்சியின்போது திட்டமிட்டுச் சீரழிக்கப்பட்டன. மற்ற எல்லாவற்றிலும் போலவே, கப்பல் போக்குவரத்துத்துறை விஷயத்திலும், இந்தியாவின் நலன்கள் இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டன. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அந்த ஏகபோகத்தை எதிர்த்து, இந்தியாவில் முதன்முதலில் புரட்சிக் கொடி தூக்கிய பெருமை ‘கப்பலோட்டிய தமிழர்’ வ.உ.சிதம்பரனாரையே சாரும்.

நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, கப்பல் போக்குவரத்துக்கு முன்னுரிமையும் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டது. அதன் பலனாக, சுதந்திரம் பெற்று வெள்ளி விழா கொண்டாடும் நேரத்தில் (1974-1975 காலகட்டத்தில்) சுதந்திரம் பெற்ற போது இருந்ததைக் காட்டிலும் இந்தியக் கப்பல்களின் டன் எடையளவு, 27 மடங்கு உயர்ந்திருந்தது. அப்போது, உலக அளவில் வியாபாரக் கப்பல்களின் டன் எடையளவு, 1974-ஆம் ஆண்டு ஜூலை 1 அன்று, 311 மில்லியனாக இருந்தது. அன்று இந்தியக் கப்பல்களின் டன் எடையளவு, 3.5 மில்லியன்தான். எனில், கப்பல் வாணிபத்தில் இந்தியா எவ்வளவு தூரம் பின் தங்கியிருந்தது என்பது புரியும்.

கடல் வாணிபத்தில் ஒரு நாடே அப்படி மெல்ல மெல்ல ஊர்ந்துகொண்டிருந்தபோது, ஒரு மாநிலம் இரண்டு கப்பல்களை வாங்கி, நாட்டின் பொருளாதாரத்துக்குப் பங்களிக்க முனைந்தது. அந்த மாநிலம் தமிழ்நாடு. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசால், அது சாத்தியமாயிற்று!

### முன்னோடி மாநிலம்

தன்னிடம் கப்பல் போக்குவரத்துத் துறை இருந்தாலும், ஒன்றிய அரசு, தனியார் நிறுவனங்களும் கப்பல்களை வைத்துக்கொள்ள அனுமதிக்கிறது. அப்படி தனியாருக்கு அனுமதி வழங்கும்போது, ஏன் மாநில அரசுகளுக்கு அனுமதி வழங்கக் கூடாது என்று திட்டக்குழுக் கூட்டம் ஒன்றில் கலைஞர் அவர்கள் கேள்வி எழுப்பினார். அதற்கு திட்டக் குழு அனுமதி அளித்ததைத் தொடர்ந்து, இந்தியாவிலேயே முதன்முதலாக ‘பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்’ எனும் புதிய போக்குவரத்துக் கழகத்தை 1974-ஆம் ஆண்டு ஏப்ரல் 11 அன்று தமிழ்நாட்டில் கலைஞர் அரசு உருவாக்கியது.




இன்று, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திடம் ‘எம்.வி.தமிழ்ப் பெரியார் ஈ.வெ.ரா’, ‘எம்.வி. தமிழ் அண்ணா’, ‘எம்.வி. தமிழ் காமராஜ்’ ஆகிய மூன்று கப்பல்கள் இருக்கின்றன. நிலக்கரி ஏற்றி இறக்குவது தவிர, கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து விவேகானந்தர் பாறைக்கும், திருவள்ளுவர் சிலைக்கும் சுற்றுலா பயணிகளை ஏற்றிச் செல்லும் பயணிகள் படகுகளையும் இந்தக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

1974-1975-இல் இந்தக் கழகம் ரூ.5 கோடி மூலதனத்துடன் தொடங்கப்பட்டது. தொடர்ந்து 1974-ஆம் ஆண்டு டிசம்பர் 9 மற்றும் 19 ஆகிய தேதிகளில் இங்கிலாந்திலிருந்து ‘எம்.வி. தமிழ்ப் பெரியார் ஈ.வெ.ரா.’, ஜப்பானிலிருந்து ‘எம்.வி. தமிழ் அண்ணா’ ஆகிய இரண்டு கப்பல்களை இந்தக் கழகம் வாங்கியது. அவை வாங்கப்பட்ட 100 நாட்களில், அதாவது 1975 மார்ச் வரை, ரூ.8 இலட்சம் லாபம் ஈட்டிச் சாதனை படைத்தது.

### கப்பல்களின் நோக்கம்

அந்தக் கப்பல்கள் வாங்கப்பட்ட போது, அவற்றுக்கு வயது 15 ஆண்டுகள் ஆகியிருந்தன. அதுவரையில், 8 ஆண்டு வயதுக்கு அதிகமான கப்பல்களை விலைக்கு வாங்குவதில்லை என்பதுதான், கப்பல் மூலம் வாணிபம் செய்யும் நிறுவனங்கள் கடைப்பிடித்து வந்த வழக்கம். பூம்புகார் கப்பல் கழகம் அந்த வழக்கத்தை உடைத்ததற்குக் காரணம், தனது தொழிலுக்கு அவசியமானதும், தகுந்த டன் எடை அளவு உள்ள கப்பல்களை விலைக்கு வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையும்தான்.

**முதல் குரலை எழுப்பியது கலைஞர். ஒரு மாநில அரசால் என்னவெல்லாம் சாதனைகளை நிகழ்த்த முடியும், என்பதற்கு இந்தக் கப்பல் கழகம் ஒரு சான்று!**

மின்சார உற்பத்தி உள்ளிட்ட பல தேவைகளுக்காக கல்கத்தாவிலிருந்து சென்னைக்குக் கரி ஏற்றி வருவதுதான் இந்தக் கப்பல் கழகத்தின் பிரதான வர்த்தக நோக்கமாக இருந்தது. எனவே அதற்குப் பழைய கப்பல்களே மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று பூம்புகார் கப்பல் கழகம் கருதியது.

அடுத்த கட்டமாக, அனைத்து நாட்டு வர்த்தகத்தில் ஈடுபட எண்ணம் கொண்டிருந்தது. இந்தியாவிலிருந்து மேற்கு ஐரோப்பாவுக்கு உலோகக் கனிமப் பொருட்களை ஏற்றிச் சென்று இறக்கி, திரும்புகையில், உரங்கள் உள்ளிட்ட சரக்குகளை ஏற்றி வரும் வகையில் பயன்படக் கூடிய 20 ஆயிரம் டன் முதல் 25 ஆயிரம் டன் வரையிலான சரக்குகளைச் சுமந்து செல்லக் கூடிய நான்கு நவீன சரக்குக் கப்பல்களை வாங்கும் திட்டமும் அன்று அந்தக் கழகத்திடம் இருந்தது.

### கப்பல்களின் சிறப்புகள்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் வாங்கிய முதல் கப்பலான ‘எம்.வி. தமிழ்ப் பெரியார் ஈ.வெ.ரா’ கப்பல் சுமார் 60 பேர் பயணிப்பதற்கு ஏற்ற வகையில் இருந்தது. இந்தக் கப்பல் மணிக்கு சுமார் 13 நாட்டிக்கல் மைல்கள் தூரம் ஓடும் திறன் கொண்டிருந்தது. இதில் திசைக் காட்டி, எதிரொலிக் கருவி, ராடார், ஆட்டோ பைலட் போன்ற அன்றைய காலத்தின் நவீன கடற்பயண சாதனங்கள் இருந்தன.

மேலும், இந்தக் கப்பலில் நான்கு சரக்குச் சேமிப்பு அறைகள் இருந்தன. இவற்றில் 5 இலட்சத்து 70 ஆயிரம் கன அடி கொள்திறன் கொண்ட சரக்குகளை வைத்துக்கொள்ள முடியும். தவிர, இதில் இரண்டு உயிர்காப்புப் படகுகளும் இருந்தன. கிட்டத்தட்ட இதே வசதிகள் ‘எம்.வி. தமிழ் அண்ணா’ கப்பலிலும் இருந்தன.

நாட்டின் அந்நிய செலாவணி வருவாயை அதிகரிக்க, தமிழ்நாடு போன்ற கடற்கரை மாநிலங்கள் தாங்களே கப்பல்களைச் சொந்தமாக வைத்துக்கொண்டு இயக்கிக் கொள்ள அனுமதி அளித்தது வேண்டுமானால், ஒன்றிய அரசாக இருக்கலாம். ஆனால், அதற்கான முதல் குரலை எழுப்பியது கலைஞர். ஒரு மாநில அரசால் என்னவெல்லாம் சாதனைகளை நிகழ்த்த முடியும், என்பதற்கு இந்தக் கப்பல் கழகம் ஒரு சான்று..!

**...வலம் வருவோம்**

## யார் வாயை மூடவேண்டும்?

கங்கனா ரணாவத்தின் மூர்க்கமான வாயை சகிக்க முடியாமல், ஓர் அறை விட்ட அந்தப் பெண் காவலருக்கு எத்தனை அறிவுரைகள். ‘ஜனநாயகம் கெட்டு விட்டது’, ‘பண்பாட்டு மரபு மீறப் பட்டு விட்டது’ என்று எத்தனை பதைபதைப்புகள்.

அரசானது, மக்களின் வாழ்வாதாரங்களைச் சிதைக்கும் வண்ணம் சட்டங்கள் போடுகிறது. வரிகள் விதிக்கிறது. கட்டுமானங்கள் எழுப்புகிறது. வேறு வழியில்லாமல் போராடும் மக்கள் மீது வன்முறை தாக்குதல் நடத்துகிறது. வழக்குகள் போட்டு, அலைக்கழிக்கிறது. கங்கனா போன்ற அடிவருடிகளை வைத்து பயங்கரவாதிகள் என்று அவதூறு பரப்புகிறது.

எப்போதாவது பாதிக்கப்பட்ட மக்கள் ஒரு சின்ன எதிர்ப்புக் காட்டினால், நாடே கதறித் துடிக்க வேண்டும் என்று ஆளும் வர்க்க ஆதரவாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

கங்கனா பெண், நடிகை என்பதால், இந்தத் தாக்குதல் என்று அபத்தமாக பேசுகின்றனர். உண்மையில் கங்கனாவின் நடிகை என்ற புகழை, தங்கள் நலனுக்குப் பயன்படுத்திக் கொள்வது ஆளும் வர்க்கம்தான்.

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் கோபம் பீறிட்டு வரத்தான் செய்யும். வாயை அடக்கவில்லை என்றால், அறை விழத்தான் செய்யும். அறைந்த காவலர் சஸ்பென்ட், வழக்கு, டிஸ்மிஸ் எல்லாம் நடக்கும் என்று தெரிந்தே அறைந்துள்ளார். இனிமேல், கங்கனாவும் அபாண்டங்களைப் பேசும் போது அறை விழ வாய்ப்பு உள்ளது என்று தெரிந்தே பேசட்டும்.

அஹிம்சை, பண்பாட்டுக் காவலர்கள் பாடம் எடுக்க வேண்டியது அரசுக்கும் அதன் ஆதரவாளர்களுக்கும் தான்.

**-எழுத்தாளர் இரா.முருகவேள் முகநூல் பதிவு**

## ஃப்ளாஷ்பேக்





என்.இரவீந்திரன்

### அதே உணர்வுடன் பயணம்!

1976-ஆம் ஆண்டு ‘நெருக்கடி நிலை’ அமல்படுத்தப்பட்ட போது மிசாவில் கழகத் தொண்டர்கள் பலர், கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். அப்போது அன்றைய தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் இரா. கிருஷ்ணன் அவர்களின் துணைவியார் கி.சந்திரா தேவி தலைமையில், தலைவர் கலைஞரைச் சந்தித்து ‘மிசா வழக்கு நிதி’ வழங்கினோம். கோபாலபுரம் இல்லத்தில், சிறுவனாக நானும் என் தந்தையும் தலைவர் கலைஞர் அவர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. இன்றைக்கும் அதே கழக உணர்வோடு பயணிக்கிறேன்.

**- என்.இரவீந்திரன்,**
**வட்டக் கழகச் செயலாளர்,**
**தூத்துக்குடி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### திராவிட முன்னேற்றக் கழகம்!

1957-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், கழகத்தின் சார்பாக வெற்றி பெற்றவர்களுக்காக, சென்னை கடற்கரையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்போது உரையாற்றிய பேரறிஞர் அண்ணா, “திராவிடப் பண்பாட்டினைப் பின்பற்றுகிறவர்கள் அனைவரும், ‘திராவிடர்களே’ என்றும், அதனால்தான் ‘திராவிடர் முன்னேற்றக் கழகம்’ என்று பெயர் வைக்காமல், ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ என்று பெயர் வைத்ததாகக் குறிப்பிட்டார்.”

## திராவிடத்தால் வாழ்கிறோம்

507

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131